சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 1/2024

பெயர். திரு.கோபாலகிருஷ்ணன் நாள் 04.07.2026
த/பெ. அன்னக்கிளி

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் மகன் அளித்த புகாரின் பேரில் தான் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். புகாரில் என் மகன் அளித்த விபரங்கள் சரிதான். எனக்கு எங்கெங்கு அடிப்பட்டது என்றால் மூன்று பற்கள் உடைந்துவிட்டது, உதடு, விலாஎலும்பு, இடது காது மற்றும் மூக்கில் அடிப்பட்டது. நான் சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால், கடக்கதற்காக நிற்கும் போது ஏற்பட்டது. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. என்னுடைய வாகனத்திற்கு காப்பீடு செய்யப்படவில்லை. இருசக்கர வாகனம் என்னை இடித்தது. ம.சா.ஆ.10 ல் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு 67 வயது என்றால் சரிதான். அப்போது நான் வேலை ஏதும் செய்யவில்லை. ஓய்வூதியம் பெற்று வந்தேன். விபத்தினால் எனக்கு ஓய்வூதியம் நிறுத்தப்படவில்லை.

2) மருத்துவ செலவீனங்கள் எனக்கு திரும்ப செலுத்தப்பட்டுவிட்டது என்றால் இல்லை. விபத்து என்னுடைய கவனக்குறைவு மற்றும்

அஜாக்கிரதையால் சாலையை கடக்கும் போது ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.12 நஷ்டஈடு பெறுவதற்காக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு எவ்வித மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றால் சரியல்ல. மனுவில் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகைகள் மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**